குழித்துறை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 28-04-2023 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தாங்கள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள பாலவிளை சாலையினை சீர் செய்ய ரூ.32.00 லட்சம் மதிப்பீட்டில் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் 01-12-2022, 24-01-2023, 10-03-2023 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மதிப்பீட்டை விட மிகவும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் மன்றத்தின் மூலம் மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நான்காவது முறையாக 05-04-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1) திரு.பி. ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரர்
2) திரு.கே. மணிகண்டன், ஒப்பந்ததாரர்
3) திரு. ஜாண்சன், ஒப்பந்ததாரர்

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவர் 2022-2023-ம் ஆண்டின் ஒப்பந்ததாரர் புதுப்பித்தல் சான்று சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் திரு.கே. மணிகண்டன் என்ற ஒப்பந்ததாரர் மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கான வைப்புத் தொகையான வரைவோலை சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இரு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழிற்நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை. ஆகவே மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி நான்காவது அழைப்பாக இருப்பதினால் திரு.எம். ஜாண்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டதில் மதிப்பீட்டு விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3997/2022/இ1.
தீர்மானம் எண் 503 - திரு.ஜாண்சன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளப்பட்டது

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தை சுற்றிலும் சுற்றுசுவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது. இதில் ஆற்றுக்கரையின் பகுதியில் சுற்றுசுவர் கட்ட முடியாத காரணத்தினால் barbed wire fencing அமைத்து பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது. எனவே நகராட்சியில் போதிய

நிதி இல்லாத காரணத்தினால் ஆற்றுக்கரையின் பகுதியில் IUDM 2018-2019 திட்டத்தின்கீழ் barbed wire fencing அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அறிவுறுத்தி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.
ந.க.எண்.14/2014/இ1.

தீர்மானம் எண் 504 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75P-1813-ற்கு 2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்திலுள்ள அனைத்து பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேசே மதிப்பீடு ரூ.90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டில் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2795/2017/இ1.

தீர்மானம் எண் 505 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் பேருந்து நிலையம் அருகில் மொழிப்போர் தியாகிகள் நினைவு சின்னம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1,42,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பணியினை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1102/2023/இ1.

தீர்மானம் எண் 506 - அனுமதிக்கப்பட்டது

நகர்மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.